# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 254/மா/2025
நாள் 03.09.2026

V. சித்திக், சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

சென்னை–600 118, கொடுங்கையூர், முதல் மெயின் ரோடு, நாராயணசாமி கார்டன், கதவு எண் 2/3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. சித்திக் என்பவரின் 09.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.07.2025 அன்று பெறப்பட்டு 254/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 118, கொடுங்கையூர், முதல் மெயின் ரோடு, நாராயணசாமி கார்டன், கதவு எண் 2/3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. சித்திக் என்பவர் 09.07.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, Zone-4, வார்டு–34, கொடுங்கையூர், சீத்தாராம் நகர் பிரதான சாலையில் தார் சாலை அமைக்கும் டெண்டர் பணியின் ஒரு செயலாக பழைய சாலையை மில்லிங் செய்யும் பணி 29.05.2025 அன்று நடைபெற்றது. ஆனால் மில்லிங் பணிகள் முறையாக செய்யப்படவில்லை. ஒரே சீராகவும் சமமாகவும் மில்லிங் செய்யவில்லை. சரியான அளவீடுகளில் மில்லிங் செய்யப்படவில்லை.

எனவே 30.05.2025 அன்று நான் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, இணையவழி புகார் எண் 2025-369KLN பதிவிட்டேன். தற்போது 30 நாள் மேலாகியும் சம்பந்தபட்ட வார்டு–34 AE அவர்கள் என்னுடைய புகாருக்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார். தற்போது சாலை அமைக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**இந்த புகார் மூலம் மனுதாரர் கோரும் பரிகாரம்:–**

1) மேலே குறிப்பிட்டுள்ள சாலையின், பழைய தார் அமைந்துள்ள பரப்பை மேடு பள்ளம் இல்லாமல் சமமாக ஒரே சீராக மில்லிங் செய்ய வேண்டும்.

2) டெண்டர் ஒப்பந்தப்படி 40 mm மில்லிங் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

3) தரமான சாலை அமைவதை உறுதிப்படுத்த வேண்டும்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பிய பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் தனது 16.07.2026 நாளிட்ட கடிதம் ம.அ4.வா.34. ந.க. எண் /SPL/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்களிடமிருந்து மனு பெறப்பட்டதன் அடிப்படையில் தகவல் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண் | மனுதாரரால் கோரப்படும் தகவல்கள் | வழங்கப்படும் தகவல்கள் |
|---|---|---|
| (1) | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–04, வார்டு–34, கொடுங்கையூர். சீத்தாராம் நகர் பிரதான சாலையில் முறையாக மில்லிங் செய்யாதது தொடர்பாக | மேற்கண்ட சாலையில், ஒப்பந்த விதிமுறைகளின்படி சராசரியாக 40 மி.மீ. அளவிற்கு மில்லிங் பணி மேற்கொள்ளப்பட்டு, அதன் மேல் புதிய தார் சாலை அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| (2) | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–04, வார்டு–34, கொடுங்கையூர். சீத்தாராம் நகர் பிரதான சாலையில் தார் சாலை அமைக்கும் டெண்டர் பணியின் ஒரு செயலாக பழைய சாலையை மில்லிங் செய்யும் பணி 29.05.2025 அன்று நடைபெற்றது. ஆனால் மில்லிங் பணிகள் முறையாக செய்யப்படவில்லை ஒரே சீராகவும் சமமாகவும் மில்லின் செய்யவில்லை சரியான அளவீடுகளில் மில்லின் செய்யப்படவில்லை. | மேற்குறிப்பிட்ட சீத்தாராம் நகர் பிரதான சாலையில், 29.05.2025 அன்று ஒப்பந்த விதிமுறைகளின்படி ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தார் சாலை சராசரியாக 40 மி.மீ. அளவிற்கு மில்லிங் செய்யப்பட்டது. அதன் பின்னர், அதே சாலையில் புதிய தார் சாலை அமைக்கும் பணி ஒப்பந்த விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப் பட்டுள்ளது. எனவே, மில்லிங் பணி மற்றும் புதிய தார் சாலை அமைக்கும் பணி ஒப்பந்த விதிமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (3) | எனவே 30.05.2025 அன்று நான் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இணைய வழியாக புகார் எண் 2025–369KLN பதிவிட்டேன். தற்போது 30 நாள் மேலாகியும் சம்பந்தப்பட்ட வார்டு 34 உதவி பொறியாளர் அவர்கள் என்னுடைய புகாருக்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார். தற்போது சாலை அமைக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | தாங்கள் 30.05.2025 அன்று பதிவு செய்த இணையவழி பொதுமக்கள் குறைதீர்க்கும் புகார் மனு எண் 2025–369KLN தொடர்பாக இவ்வலுவலகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதன் விவரங்கள் 07.08.2025 அன்று தங்களுக்கு உரிய பதில் வழங்கப்பட்டுள்ளது. |

இந்த புகார் தொடர்பாக மனுதாரர் கோரும் பரிகாரம்:–

| வ. எண் | மனுதாரர் கோரும் பரிகாரம் | வழங்கப்படும் தகவல்கள் |
|---|---|---|
| (1) | மேலே குறிப்பிட்டுள்ள சாலையின், பழைய தார் அமைந்துள்ள பரப்பை மேடு பள்ளம் இல்லாமல் சமமாக ஒரே சீராக மில்லிங் செய்ய வேண்டும். | பருவநிலை மாற்றத்தால் அவ்வப்போது பெய்யும் கடுமையான மழையினால் மேற்குறிப்பிட்ட சாலையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அப்பாதிப்புகள் உடனடியாகச் சீரமைக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |
| (2) | டெண்டர் ஒப்பந்தப்படி 40 mm மில்லிங் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் தரமான சாலை அமைவதை உறுதிப்படுத்த வேண்டும் | டெண்டர் ஒப்பந்த விதிமுறைகளின்படி சராசரியாக 40 மி.மீ. அளவிற்கு மில்லிங் பணி மேற்கொள்ளப்பட்டு, தரநிலைகளுக்கு இணங்க தரமான தார் சாலை அமைக்கப் பட்டுள்ளதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |
| (3) | தரமான சாலை அமைவதை உறுதிப்படுத்த வேண்டும். | மேற்குறிப்பிட்ட சாலையான சீதாராம் நகர் பிரதான சாலை அமைக்கும் நேரத்திலும், சாலை அமைக்கப்பட்டு முடிவடைந்த பிறகும், தேவையான தரம் உறுதிக்கான பரிசோதனைகள் திட்ட மேலாண்மை ஒப்பந்ததாரர் (PMC)திருவாளர் ஜே. இன்ஜினியர்ஸ் மூலம் உறுதி செய்யப்பட்டது.<br><br>மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உயர் மேலதிகாரிகளின் மூலம் தரம் மேற்பார்வையிடப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இனி வரும் காலங்களிலும் இதே முறையை பின்பற்றி தரமான சாலைகள் அமைத்து தரப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |

5. மனுதாரர் 17.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளர் 17.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"(1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு 34, கொடுங்கையூர், சீத்தாராம் நகர் பிரதான சாலையில் 29.05.2025ம் ஆண்டு ஒப்பந்த விதிகளின்படி ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தார் சாலை சராசரியாக 40 மி.மீ. அளவிற்கு மில்லிங் செய்யப்பட்டது. அதன் பின்னர், அதே சாலையில் புதிய தார் சாலை அமைக்கும் பணி ஒப்பந்த விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, மில்லிங் பணி மற்றும் புதிய தார் சாலை அமைக்கும் பணி ஒப்பந்த விதிமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) மனுதாரரின் குறை தீர்க்கும் புகார் மனு எண்.2025–369 KLN தொடர்பாக, இவ்வலுவலகத்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விவரங்கள் 07.08.2025 அன்று மனுதாரருக்கு உரிய பதில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பருவநிலை மாற்றத்தால் அவ்வப்போது பெய்யும் கடுமையான மழையினால் மேற்குறிப்பிட்ட சாலையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அப்பாதிப்புகள் உடனடியாகச் சீரமைக்கப்படும். மேலும் டெண்டர் ஒப்பந்த விதிமுறைகளின்படி சராசரியாக 40 மி.மீ அளவிற்கு மேற்கொள்ளப்பட்டு தரநிலைகளுக்கு இணங்க தரமான தார் சாலை அமைக்கப்படுகிறது. மேற்படி சாலையினை அளவிட்டு M.Book-ல் பதிவு செய்து உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரால் சரிபார்க்கப்பட்டது. மேற்படி சாலை பணியினை மூன்றாம் தரப்பு மேலாண்மை திட்ட குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு தரம் உறுதி செய்யப்பட்டது. இதே முறையை பின்பற்றி இனிவரும் காலங்களில் தரமான சாலைகள் அமைத்து தரப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கான புகைப்பட நகல்களை இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.''

7. மனுதாரர் மனு மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டலம் அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி, Zone-4, வார்டு–34, கொடுங்கையூர், சீத்தாராம் நகர் பிரதான சாலையில் தார் சாலை அமைக்கும் டெண்டர் பணியின் ஒரு செயலாக பழைய சாலையை மில்லிங் பணிகள் முறையாக ஒரே சீராகவும், சரியான அளவீடுகளில் செய்யப்படவில்லை என்பதும், இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி இணையவழியாக புகார் பதிவிட்டு, 30 நாள் மேலாகியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், தற்போது சாலை அமைக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதும், மேலே குறிப்பிட்டுள்ள சாலையில் போடப்பட்டுள்ள தார் அமைந்துள்ள பரப்பை மேடு பள்ளம் இல்லாமல் சமமாக ஒரே சீராக மில்லிங் செய்வதையும், டெண்டர் ஒப்பந்தப்படி 40mm மில்லிங் செய்யப்படுவதை உறுதிபடுத்துவதற்கும் மற்றும் தரமான சாலை அமைவதை உறுதிப்படுத்துவதற்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு 34, கொடுங்கையூர், சீத்தாராம் நகர் பிரதான சாலையில் 2025ம் ஆண்டு ஒப்பந்த விதிகளின்படி ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தார் சாலை சராசரியாக 40 மி.மீ. அளவிற்கு மில்லிங் செய்யப்பட்ட பின்னர், அதே சாலையில் புதிய தார் சாலை அமைக்கும் பணி ஒப்பந்த விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதும், எனவே, மில்லிங் பணி மற்றும் புதிய தார் சாலை அமைக்கும் பணி ஆகியவை ஒப்பந்த விதிமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் குறை தீர்க்கும் புகார் மனு தொடர்பாக, இவ்வலுவலகத்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விவரங்கள் மனுதாரருக்கு உரிய பதில் வழங்கப்பட்டுள்ளது என்பதும், அவ்வப்போது பெய்யும் கடுமையான மழையினால் மேற்குறிப்பிட்ட சாலையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அப்பாதிப்புகள் உடனடியாகச் சீரமைக்கப்படும் என்பதும், டெண்டர் ஒப்பந்த விதிமுறைகளின்படி சராசரியாக 40 மி.மீ அளவிற்கு மில்லிங் மேற்கொள்ளப்பட்டு தரநிலைகளுக்கு இணங்க தரமான தார் சாலை அமைக்கப்படுகிறது என்பதும், மேற்படி சாலை பணிகள் அளவீடு செய்து அதனை M.Book-ல் பதிவு செய்து உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரால் சரிபார்க்கப்பட்டு, சாலை பணியினை மூன்றாம் தரப்பு மேலாண்மை திட்ட குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு தரம் உறுதி செய்யப்பட்டது என்பதும், இதே முறையை பின்பற்றி இனிவரும் காலங்களில் தரமான சாலைகள் அமைத்து தரப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி

மண்டலம் 4–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டலம் அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, Zone-4, வார்டு–34, கொடுங்கையூர், சீத்தாராம் நகர் பிரதான சாலையில் தார் சாலை அமைக்கும் பணி தொடர்பாக, டெண்டர் ஒப்பந்த விதிமுறைகளின்படி சராசரியாக 40 மி.மீ அளவிற்கு மில்லிங் மேற்கொள்ளப்பட்டு தரநிலைகளுக்கு இணங்க தரமான தார் சாலை அமைக்கப்படுகிறது என்றும், மேற்படி சாலையின் பணிகள் M.Book-ல் பதிவு செய்து உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரால் சரிபார்க்கப்பட்டு, அச்சாலை பணியினை மூன்றாம் தரப்பு மேலாண்மை திட்ட குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு தரம் உறுதி செய்யப்பட்டது என்றும், இதே முறையை பின்பற்றி இனிவரும் காலங்களில் தரமான சாலைகள் அமைத்து தரப்படும் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, இனி வரும் காலங்களில் அமைக்கப்படும் பழைய தார் சாலையின் பரப்பை மேடு பள்ளம் இல்லாமல் சமமாக ஒரே சீராக மில்லிங் செய்வதையும், டெண்டர் ஒப்பந்தப்படி 40mm மில்லிங் செய்யப்படுவதை உறுதிப்படுத்துமாறும் மற்றும் தரமான சாலை அமைவதை உறுதிப்படுத்துவதற்கான பணிகளை மண்டல அலுவலரின் மேற்பார்வையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. V. சித்திக்,
கதவு எண் 2/3, நாராயணசாமி கார்டன்,
முதல் மெயின் ரோடு, கொடுங்கையூர், சென்னை–600 118.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை 600 021.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/9/26
செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032